**வேதத்தை புரிந்து கொள்வதில் உள்ள 10 சிரமங்கள்**
Thursday Bible Study
ACA Avadi Church
08 February 2024

**சங்கீதம் 119:18**
உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.

**வேதாகமம் ஒரு எளிய புத்தகம் என்று நாம் நினைக்கின்றோம்:**
- வேதத்தில் உள்ள சில பகுதிகள், பெரும்பான்மையான வாசகர்கள் புரிந்து கொள்ளும் விதமாக எளிமையாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.
- ஆனால் வேதத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகள் அப்படி இல்லை.
- ஒருமுறை படித்த பிறகு அதன் பக்கங்களின் கருத்தை உங்களால் உடனடியாகப் புரிந்து கொள்ள முடியாது.
- சில பகுதிகளை புரிந்து கொள்ள பல நாட்கள், வாரங்கள், மாதங்கள் ஏன் சில வருடங்கள் கூட எடுத்துக்கொள்ளும்.

- வேதத்தில் அநேக வரலாற்று நிகழ்வுகள் இருப்பதினால் - சிலர் இதை வரலாற்று புத்தகமாக பார்க்கின்றனர்
- வேதத்தில் பல கதைகள் இருப்பதால் - சிலர் அதை ஒரு கதை புத்தகமாக பார்க்கின்றனர்.
- வேதாகமம் - நாம் வெறுமனே வேதாகமத்தை எடுத்து ஒரு பழக்கமான (பரீட்சயமான) புத்தகம் போல படிக்க முடியாது.
- யாரெல்லாம் வேதத்தைப் படிப்பதற்கு தன்னுடைய நேரத்தை பிரத்தியேகமாக முதலீடு செய்கிறார்களோ அவர்களுக்கு இதை புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்று தெரியும்.

## வேதத்தை புரிந்து கொள்வதில் உள்ள 10 சிரமங்கள்:

### 1. காலத்தினால் ஏற்படும் கடினம்:
- வேதாகமத்தின் முதல் புத்தகம் எழுதப்பட்ட காலத்துக்கும் அதன் கடைசி புத்தகம் எழுதப்பட்ட காலத்துக்கும் 2000 முதல் 4000 வரை வரலாற்றில் கடந்து உள்ளது.
- வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் கி.மு 1400 ஆம் ஆண்டு எழுதப்பட்டது.
- கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தல் விசேஷம் கி.பி 90 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. வேதம் எழுதி முடிக்கப்பட்ட காலத்துக்கும் இப்பொழுது நாம் வாழ்கிற காலத்துக்கும் கிட்டத்தட்ட 1900 ஆண்டுகள் கடந்தயிற்று.
- இந்த இடைப்பட்ட காலத்தில், உலகம் மிகப்பெரும் முறையில் மாறியிருக்கிறது.
- நம்மில் அனேகருக்கு அந்தக்கால உலகத்தைப் பற்றிய அத்தியாவசிய தகவல்கள் இல்லை.
- ஒரு உரையின் அர்த்தம் என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள முடியாமல் போகலாம், ஏனெனில் அதில் உள்ளடக்கிய உட்பொருள் கடந்த காலத்தில் அகற்றப்பட்டு விட்டாயிற்று.
- அதன் விளைவாக ஏற்பட்ட கால இடைவெளியை சமன் செய்ய வேண்டும் .

## 2. புவியியல் சார்ந்த பிரச்சனை:

வேதத்தில் உள்ள சம்பவங்கள் எல்லாமே மத்திய கிழக்கு, எகிப்து மற்றும் மத்திய தரைக்கடல் நாடுகளில் நடந்தவை.
பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு நமக்குக் கிடைத்தால் கூட, சில நிகழ்வுகளை நம்மால் புரிந்து கொள்ள முடியாது.
பண்டைய இஸ்ரவேல், கானான் என்று அழைக்கப்படும் பகுதியில் தொடங்கியது, இது இன்றைக்கு உள்ள இஸ்ரவேல் யோர்தான் லெபனான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியது. (மாறியுள்ளது).

• இப்பகுதி மேற்கில் மத்தியதரைக் கடல் எல்லையாக இருந்தது அவைகள் பாலைவனம் மற்றும் மலைகளை உள்ளடக்கி வறண்ட மற்றும் வளமான மண்டலங்களுக்கு இடையே ஒரு வேறுபாட்டை உருவாக்குகின்றன.
• இஸ்ரேல் ஒரு சிறிய நாடு. ஆனால் பல மாறுபட்ட நிலப்பரப்புகலிகளை கொண்டுள்ளது,
• இஸ்ரேலுக்கு நான்கு புவியியல் பகுதிகள் உள்ளன-

அ. 185 கிமீ நீளமுள்ள மத்தியதரைக் கடலோர சமவெளி.
ஆ. வடக்கு மற்றும் மத்திய இஸ்ரேலின் மலைப்பகுதிகள்,
இ. பெரிய பிளவு பள்ளத்தாக்கு : வடக்கிலிருந்து தெற்கு வரைக்கும் உள்ள கிழக்கத்திய எல்லையில் பெரிய பிளவு போன்ற நீண்ட பள்ளத்தாக்கு ஒரு முனையிலிருந்து மறு முனை வரைக்கும் உள்ளது.
ஈ. தெற்கில் உள்ள பகுதியில் நெகேவ் பாலைவனம் உள்ளது இது மக்கள் தொகை குறைவான இடம்.

• யோர்தான் நதி, வடக்கே டானில் இருந்து தெற்கே பாய்கிறது
• அங்கு அது கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்தில் உள்ளது
• பின்னர் அது கலிலேயா கடல் என்றும் அழைக்கப்படும் நன்னீர் ஏரியான திபெரியாஸில் பாய்கிறது.
• இது கடல் மட்டத்திலிருந்து 686 அடி (209 மீட்டர்) கீழே உள்ளது.
• இறுதியாக யோர்தான் நதி அதிக உப்புத்தன்மை கொண்ட சாக்கடலில் விழுகிறது.
• இது கடல் மட்டத்திற்கு கீழே 1,312 அடி (400 மீட்டர்) தாழ்வாக உள்ளது
• இது பூமியின் மேற்பரப்பில் உள்ள இயற்கை நிலப்பரப்பு அம்சத்தின் மிகக் குறைந்த நிலமுனையாகும்.
• எருசலேம் (யூதாவின் மலைப்பகுதியில் அமைந்துள்ளது) கடல் மட்டத்திலிருந்து 2,474 அடி உயரத்தில் உள்ளது.

• யூதாவின் மலைநாட்டின் கிழக்குப் பகுதியில் நீங்கள் செல்லத் தொடங்கும் போது, நீங்கள் கடல் மட்டத்திலிருந்து 1,300 அடி (400 மீட்டர்) கீழே உள்ள யோர்தான் பள்ளத்தாக்கின் சரிவின் ஊடாக தொடங்குவீர்கள்.

• இஸ்ரேல் மாறுபட்ட நிலப்பரப்பின் காரணமாக, அவை பலவிதமான தட்பவெப்ப நிலைகளைக் கொண்டுள்ளது.
• இரண்டு வெவ்வேறு பருவங்கள் உள்ளன:

1. குளிர்ந்த, மழை பெய்யும் குளிர்காலம் (அக்டோபர்-ஏப்ரல்) மற்றும்
2. வறண்ட, வெப்பமான கோடை (மே-செப்டம்பர்).

• மழைப்பொழிவு தெற்கில் லேசாக இருக்கும் - வருடத்திற்கு சுமார் 1 அங்குலம் (25 மிமீ).
• வடக்கில் இது 44 அங்குலம் (1,120 மிமீ) வரை உள்ளது
• இந்த புவியியல் முறை இங்கு குடியேறியவர்களின் உணவுமுறைகள் முதல் அவர்கள் வாழ்ந்த இடம் வரைக்கும் அனைத்திலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

• செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளையும் மேய்ப்பவர்கள் பால் மற்றும் பாலாடைக்கட்டியை பெரிதும் நம்பியிருந்தார்கள்.
• விவசாய பகுதிகளில் குடியேறியவர்கள் ஒலிவ மரங்கள் மற்றும் திராட்சை செடிகளை வளர்த்தார்கள். பார்லி, கோதுமை,பருப்பு மற்றும் கொட்டைகள் பண்டைய இஸ்ரேலிய உணவின் பொதுவான பிரதான உணவுகள்.
• மத்தியதரைக் கடல் மறுபக்க எல்லையாக இருந்ததால், மீன்களும் தினசரி உணவில் முக்கிய உணவாக மாறியது.
• பண்டைய இஸ்ரேலின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி, கைத்தொழில் செய்யும் தொழிலாளர்களை நம்பியிருந்தது. உதாரணமாக: வயலில் வேலை செய்பவர்கள், ஆடு மேய்ப்பவர்கள், உலோகங்களில் வேலை செய்வது, களிமண் வேலைகள்

### 3. மொழியின் பிரச்சனை:

வேதம் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட மூன்று மொழிகள் என்னவென்றால் : எபிரேய மொழி, கிரேக்க மொழி & அராமிக் மொழி ஆகும்
• ஒவ்வொரு மொழிக்கும் எழுதும் பாணி வேறுபடும்
• வேதத்தை படிக்கும் நம்மில் பெரும்பாலோர் எபிரேய அல்லது கிரேக்க மொழியை தாய்மொழியாக கொண்ட யூதர் அல்ல.
• நவீன கிரேக்கம் அல்லது நவீன எபிரேய மொழிகள் பேசுபவர்களாக இருந்தாலும் 2000 முதல் 4000 ஆண்டுகள் முன் பேசப்பட்ட வார்த்தைகளும் அதின் அர்த்தங்களும் மாறுபடும்.
• நாம் மூல மொழிகளைப் படிக்கும் முதல் நூற்றாண்டு வாசகர்கள் அல்ல என்பதால், சில வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களின் பொருளைப் புரிந்துகொள்ள முயலும்போது பிரச்சினைகள் ஏற்படலாம்.
• அன்றைய காலத்தில் பயன்படுத்திய பழமொழிகளின் அர்த்தத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியாததினால் பிரச்சனைகள் விளைகின்றன.
• வார்த்தைகள் மற்றும் அதை பயன்படுத்திய விதத்தை பற்றிய அறிவு நமக்கு இல்லாததினால் வேதத்தை துல்லியமாக மொழிபெயர்ப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.

• மூல பாஷையில் உள்ள இலக்கணக் கட்டமைப்பின் நிமித்தமாக சில சிரமங்களும் உள்ளன.

### 4. எழுத்து வகையில் உள்ள வேறுபாடுகள் (மொழி வகை):

- வேதத்தில் பல்வேறு வகையான இலக்கிய நடைகள் உள்ளன. அதில் சில: வரலாறு, சட்டம், கவிதை, பாடல்கள், ஞானப்பாட்டு, தீர்க்கதரிசனம், தனிப்பட்ட கடிதங்கள், மற்றும் வெளிப்பாடுகளின் இலக்கியம் (அபோகாலிப்டிக்) உள்ளடங்கி இருக்கின்றன.
- வரலாற்று இலக்கியம் ஞான இலக்கியத்தை விட வேறு விதமாக மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும்

- அபோகாலிப்டிக் (கடைசி கால வெளிப்பாடுகள்) எழுத்துக்களைப் போலவே கவிதைகளையும் புரிந்து கொள்ள முடியாது.
- ஒரு தனிப்பட்ட கடிதம் இன்று நமக்கு அர்த்தம் உள்ளதாக இருப்பினும் அவை எழுதப்பட்ட நபருக்கு சரியாய் பொருந்தினது போல நமக்கு பொருந்தாது.

### 5. கலாச்சார சிக்கல்கள்

• வேதாகம நிகழ்வுகள் நடந்த அன்றைக்கு இருந்த இஸ்ரவேலரின் கலாச்சாரத்தை விட இன்றைக்கு உள்ள கலாச்சாரம் முற்றிலும் வேறுபட்டு இருக்கின்றது. ஆகவே வேதாகமத்தை துல்லியமாக விளக்குவதற்கு கலாச்சார பின்னணியை புரிந்து கொள்ள வேண்டும்.
• அன்றைக்கு இருந்த பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை நாம் இப்பொழுது சந்திப்பதில்லை என்பதால் அது நமக்கு புரிவதும் இல்லை.
• அவர்கள் பயன்படுத்திய பயண முறைகள் மெதுவானதாகவும் கலைப்புறச் செய்ததாகவும் இருந்தது .
• வெவ்வேறு பழக்கவழக்கங்கள் (உள்நாட்டு, பொது, குடும்பம், சமூக பழக்கவழக்கங்கள்)
• வெவ்வேறு நடைமுறைகள் (உணவு, உண்ணும் முறை, உடைகள் மற்றும் ஆடை நடை)
• வெவ்வேறு அமைப்புகள் (பொருளாதாரம், அரசியல், சட்டம்)
• வெவ்வேறு பழக்கங்கள்.
• விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு.
• கட்டிடக்கலை.

### 6. பல்வேறு சூழ்நிலை மாற்றங்கள்.

• வெவ்வேறு வேதப்பகுதிகளில் சில மாற்றங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதால் இதை நாம் புரிந்து கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன.
• உதாரணமாக: ஆதியாகமத்தில் படைக்கப்பட்ட எல்லாமே நல்லது என்று வேதாகமம் சொல்கிறது.
ஆதியாகமம் 1:31
அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று.

• ஆனால், மனிதன் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்த பிறகு (ஆதியாகமம் 3), நன்றாக இருந்த காரியங்கள் இப்பொழுது சபிக்கப்பட்டதாக மாறின.

• மோசேயின் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் புதிய ஏற்பாட்டில் நீக்கப்பட்டது:
**கொலோசெயர்: 2:16,17.**
16. ஆகையால், போஜனத்தையும் பானத்தையும்குறித்தாவது, பண்டிகைநாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. 17. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.

• ஆகவே, தேவனுடைய வெளிப்பாட்டின் முற்போக்கான தன்மையை நாம் அங்கீகரிக்க வேண்டும்.

• பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் சில உணவுகளை உண்பது தடைசெய்யப்பட்டிருந்தது. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கோ அனுமதிக்கப்பட்டுள்ளது.

**I தீமோத்தேயு 4:1-5**
1. ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே
மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்
பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்.
2. விவாகம்பண்ணாதிருக்கவும், 3. விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும்
ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும்
வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். 4. தேவன் படைத்ததெல்லாம்
நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும்
தள்ளப்படத்தக்கதல்ல. 5. அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.

• தேவன் தம்முடைய வார்த்தையை படிப்படியாக வெளிப்படுத்தி இருக்கிறார் என்பதை அறிய தவறினால், வேதத்தில் முரண்பாட்டு குறை உள்ளதாக யூகித்துக்கொள் முடியும்.

### 7. ஒரே நபருக்கு வெவ்வேறு பெயர்கள்

• சில சமயங்களில் பைபிளில் ஒரே நபருக்கு வெவ்வேறு பெயர்களைப் பயன்படுத்துவதைக் காண்கிறோம்.

• எடுத்துக்காட்டாக, **எஸ்தர் 1:1** இல் உள்ள அகாஸ்வேரு வரலாற்றில் செர்க்ஸஸ் என்று அறியப்படுகிறார்.

• எஸ்தர் என்ற பெயர் ஹடாசா என்றும் அழைக்கப்படுகிறது. **(எஸ்தர் 2:7).**

• இவ்வாறு ஒருவருக்கு வெவ்வேறு பெயர்கள் இருப்பதற்கான காரணங்கள் சில:

**1. தேவனே சிலருடைய பெயர்களை மாற்றினார்.**

ஆபிராம் ("மேன்மையான தகப்பன்") என்று இருந்த பெயரை, தேவன் ஆபிரகாம் ("ஜாதிகளின் தகப்பன் ") என்று மாற்றினார். **ஆதியாகமம் 17:5**

• சாராய் ("என் இளவரசி") என்று இருந்த பெயரை, தேவன், **ஆதியாகமம் 17:15** இல் சாராள் ("இளவரசி") என்று மாற்றினார்

• மேலும் ஆதியாகமத்தில் யாக்கோபு ("குதிகால் பிடிப்பவன்" அல்லது "ஏமாற்றுபவர்") என்று இருந்த பெயரை, தேவன், இஸ்ரவேலாக ("தேவனோடு போராடினானவன்") என்று மாற்றினார் **ஆதியாகமம் 32:28.**

• புதிய ஏற்பாட்டில், சீமோன் (கேட்பவன்) என்று அழைக்கப்பட்டவனை இயேசு கேபா ("பாறை") என்று மாற்றினார். **யோவான் 1:42 .**

**2. சிலர், மற்றவர்களால் கட்டாய பெயர் மாற்றம் செய்யப்பட்டார்கள்.**

• உதாரணமாக பார்வோன் யோசேப்பை ஒரு எகிப்தியனாக மாற்றுவதற்கு "சாப்நாத் பன்னேயா" என்று பெயர் மாற்றம் செய்தான் (ஆதியாகமம் 41:45)

• பார்வோன் நேகோ, யோசியா ராஜாவின் மூத்த மகன் எலியாக்கீமின் பெயரை யோயாக்கிம் என்று மாற்றினான் (2 ராஜாக்கள் 23:34).

• நேபுகாத்நேச்சார் பாபிலோனிய கடவுள்களை கனப்படுத்தும் வண்ணமாக தானியேலுக்கும் அவன் நண்பர்களுக்குக்கும், சாத்ராக், மேஷாக் மற்றும் அபேத்நேகோ என்று பெயர்கள் மாற்றப்பட்டது (தானியேல் 1:7).

**3. ஒரு நபரின் வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை குறிக்க அல்லது ஒருவரின் சுபாவத்தை குறிப்பதற்காக சிலரது பெயர்கள் மாற்றப்பட்டது.**

• கிதியோனின் பட்டணத்தை சேர்ந்த மனிதர்கள் அவருக்கு ஜெருப்-பால் என்ற கூடுதல் பெயரைச் சூட்டினர் ("பாகால் அவனோடே வழக்காடும்") ஏனெனில், அவர்களின் மனதில், கிதியோன் பாகாலுடன் சண்டையிட்டு அந்த கடவுளின் பலிபீடத்தை அழித்திருந்தார், .

• மோவாபில் தனது கணவரையும் இரண்டு மகன்களையும் இழந்த நகோமி, பெத்லகேமுக்குத் திரும்பியபோது தன்னை மாரா (கசப்பு) என்ற பெயரினால் அழைத்துக் கொண்டாள். (ரூத் 1:20).

**4. சில பெயர்மாற்றங்கள் உண்மையில் பெயர்மாற்றங்கள் அல்ல. அவைகள் ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழியாக்கம் செய்யப்படும்போது ஏற்படும் மாற்றம்.**

• எடுத்துக்காட்டாக, கிரேக்க மொழியின் பெயராகிய பேதுரு என்பதின் அராமிக் மொழியின் வடிவம் தான் கேபா. இவை இரண்டு பெயர்களும் "பாறை" என்கிற ஒரே அர்த்தம் கொண்டவை.

• யோசுவா என்பது இயேசுவின் எபிரேய வடிவத்தின் ஆங்கிலமயமாக்கல் (KJV இல் **எபிரேயர் 4:8**ஐப் பார்க்கவும்).

• யோவான் என்பது யோனா அல்லது யோனாவின் கிரேக்க மொழியாக்கமாகும்

5. சில மனிதர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

• **மத்தேயு 1:9:** மத்தேயு உசியாவை யோதாமின் தந்தையாகக் குறிப்பிடுகிறார்;

• எனினும், 2 இராஜாக்கள் 15:1-7 மற்றும் **1 நாளாகமம் 3:12** யோதாமின் தந்தை அசரியா என்று கூறுகின்றன.

• **2 இராஜாக்கள் 15** ஆம் அதிகாரத்தை படிக்கும்போது யோதாமின் தந்தை அசரியா என்றும் உசியா என்றும் (வசனம் 32) அழைக்கப்பட்டார்கள்

**8. சாலமோன் ஆட்சிக்குப் பிறகு இரண்டாகப் பிரிக்கப்பட்ட இஸ்ரவேல் தேசம்:**

• சாலொமோனின் மகன் ரெகொபெயாம், அரியணைக்கு வந்து ஆட்சி செய்தார்

• ஜெ(ய)ரோபெயாம் சாலமோனுக்கு எதிராக கலகம் செய்த ஒரு வேலைக்காரன்.

• இஸ்ரவேலின் 10 கோத்திரங்கள் ஜெ(ய)ரோபெயாமை ராஜாவாக்கினார்கள். யூதா மற்றும் பென்யமின் கோத்திரத்தார்கள் லேவி கோத்திரத்தாரோடு சேர்ந்து கொண்டு ரெகொபெயாமுடனே இருந்து விட்டார்கள்.

• சாலமோனின் பாவத்தினிமித்தம் இந்த பிளவு தேவனால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது (1 இராஜாக்கள் 11:11-13, 29-39)

  - வடக்கிலுள்ள 10 கோத்திரங்கள் இஸ்ரவேல் என்ற பெயரால் அழைக்கப்பட்டது.
  - தெற்கிலுள்ள மீதம் 2 கோத்திரங்கள் யூதா என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

• இரு நாடுகளும் தங்களுக்கென்று ராஜாக்களையும் தீர்க்கதரிசிகளையும் கொண்டிருந்தார்கள்.

• இஸ்ரவேலும் யூதாவும் வெவ்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு சேனைகளால் சிறையாக்கப்பட்டனர்.
• யூதாவின் வீட்டாரை சிறைபிடிக்க தேவன் பாபிலோனியர்களை அனுப்பினார். இஸ்ரவேல் வீட்டாரை கைப்பற்ற அசீரியர்களை அனுப்பினார்.
• யூதாவின் பாபிலோனிய சிறையிருப்பு 70 ஆண்டுகள் நீடித்தாலும், இஸ்ரவேல் ஒருபோதும் அசீரியாவின் சிறையிருப்பிலிருந்து முழுமையாக மீண்டு வரவில்லை.
• சமாரியர் இஸ்ரவேல் வீட்டாரில் இருந்து வந்த கலப்பினமாக கருதப்பட்டனர்.
• பல கோத்திரத்தார் தொலைந்து போனதாகக் கருதப்பட்டனர்.
• இறுதியில், வடக்கு கோத்திரத்தார் "இஸ்ரவேல் வீட்டாரின் காணாமற்போன ஆடுகளாக" ஆனார்கள்.

## 9. ஆசிரியர்களிடையே தேர்ந்தெடுத்து எழுதும் தன்மை இருந்தது:

- சில ஆசிரியர்கள் உள்ளடக்கிய சில விபரங்களை வேறு ஒரு ஆசிரியர் தவிர்ப்பதை வேதத்தில் காணலாம். அதனால் அவர் அந்த முந்திய ஆசிரியர்களின் எழுத்துக்களுக்கு உடன்படவில்லை என்பது பொருளல்ல.
• யோவான் தான் எழுதிய நற்செய்தியில் தெளிவாக இதைக் குறிப்பிடுகிறார்:

**யோவான் 20:30,31**

30. இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். 31. இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

• ஒரு ஆசிரியர் தன்னுடைய செய்திக்கு முக்கியமான ஒரு பகுதியை சுட்டிக்காண்பிக்கும் போது அதை அவர் முக்கியப்படுத்துகின்றார்.
•அவர் குறிப்பிடும் காரியங்கள் அவர் சொல்லும் நோக்கத்திக்கு பொருத்தமுடையதாக இருக்கும்.
• இந்தத் தெரிந்தெடுத்தலுக்கு உதாரணமாக **யாத்திராகமம் 6:13-27** இல் உள்ள வம்ச வரலாறு அட்டவணையில் காணலாம்.
• இங்கே, யாக்கோபின் 12 மகன்களில் மூன்று பெயர்கள் மட்டுமே பட்டியலிடப்பட்டுள்ளனர் (ரூபன், சிமியோன் மற்றும் லேவி).
• ஏனென்றால், லேவியின் இரண்டு குறிப்பிட்ட சந்ததியினரை (மோசே மற்றும் ஆரோன்) வலியுறுத்துவதே ஆசிரியரின் நோக்கமாய் இருக்கிறது.

## 10. வேதம், நிகழ்வுகளை வெறுமனே பதிவு செய்கிறதா அல்லது ஆமோதிக்கிறதா என்பதை நிதானிக்க வேண்டும்:

• எழுத்தாளர் ஒரு அறிக்கையை அல்லது நிகழ்வை அங்கீகரிக்கிறாரா அல்லது வெறுமனே அதை விவரிக்கிறாரா என்பதை தீர்மானிப்பது மற்றொரு பிரச்சனையாக இருக்கிறது,
• தவறான நடக்கையை , ஒருவர் விவரித்து சொல்லுவதால் அவர் அந்த நடக்கைக்கு பொறுப்பாளராகவோ அல்லது ஒப்புதல் அளிப்பவராகவோ அவரை ஏற்படுத்தாது.
• வேதம் எந்த ஒரு பாவ செயல்களையும் மெச்சிக் கொள்ளாமல் (பாராட்டாமல்) அவைகளை துல்லியமாக பதிவு செய்த காலங்களும் உண்டு.
• தாவீது ராஜாவின் விசுவாசத்தின் மகத்தான காரியங்களோடு கூட அவர் செய்த கொலை மற்றும் விபச்சாரமும் சேர்த்து பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

• வேதாகமத்தில் பல சந்தர்ப்பங்ளில் ஒரு விஷயத்தைக் குறித்து எந்த ஒரு விளக்கம் அளிக்காமல் வெறுமனே என்ன நடந்தது என்பதை மாத்திரம் சொல்லியிருக்கிறார்கள்.
• மௌனத்தை ஒப்புதலாக (சம்மதமாக) கருதக் கூடாது.
• சில தீய செயல்களை பதிவு செய்வது, அதை அங்கீகரிப்பதல்ல.
• எனினும் இந்த சிரமங்களை வாசகர் ஒருமுறை புரிந்து கொண்டால் பிற்பாடு, அவர்கள் வேதத்தின் போதனைகளை  புரிந்து கொள்வதற்கு தடையாயிராது.

**சங்கீதம் 119: 18.**

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந் தருளும்.